பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

08 10 2024 **TUESDAY** **7.15 AM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஹரியானா மற்றும் ஜம்மு காஷ்மீர் சட்டப் பேரவைத் தேர்தலில் பதிவான வாக்குகள் இன்று எண்ணப்படுகின்றன.

2. 70-வது தேசிய திரைப்பட விருதுகளைக் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு புதுதில்லியில் இன்று வழங்குகிறார்.

3. நாட்டில் கடந்த 10 ஆண்டுகளில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி 175 சதவீதம் அதிகரித்துள்ளதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு பிரல்ஹத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

4. நாட்டின் பருத்தி ஏற்றுமதியை அடுத்த ஆறு ஆண்டுகளுக்குள் 100 பில்லியன் டாலர் அளவுக்கு அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மத்திய ஜவுளித் துறை அமைச்சர் திரு கிரிராஜ் சிங் கூறியுள்ளார்.

5. தேசிய மகளிர் ஜூனியர் ஹாக்கி போட்டியில், மத்தியப் பிரதேசம், ஜார்க்கண்ட், ஹரியானா, ஒடிசா அணிகள் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளன.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<>>>>>

ஹரியானா மற்றும் ஜம்மு காஷ்மீர் சட்டப் பேரவைத் தேர்தலில் பதிவான வாக்குகள் இன்று எண்ணப்படுகின்றன.

ஹரியானாவில் 90 தொகுதிகளுக்கு ஒரே கட்டமாகவும், ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் 90 தொகதிகளில் மூன்று கட்டங்களாகவும் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற்றது.

இதில் பதிவான வாக்குகளை எண்ணும் பணி எட்டு மணிக்கு தொடங்க உள்ளது.

ஜம்மு காஷ்மீரில் வாக்கு எண்ணிக்கைக்கென 28 மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஹரியானாவில் 22 மாவட்டங்களில் 90 வாக்கு எண்ணிக்கை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வாக்கு எண்ணிக்கை மையங்களில் விரிவான மூன்றடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முடிவுகள் இன்று பிற்பகலில் வெளிவர தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னணி நிலவரங்களையும், முடிவுகளையும் உடனுக்குடன் **www.eci.gov.in** என்ற இணையதளத்தில் அறிந்துகொள்ளலாம் என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>

70-வது தேசிய திரைப்பட விருதுகளைக் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு புதுதில்லியில் இன்று வழங்குகிறார்.

திரைப்படத்துறையின் உயரிய விருதான தாதா சாகேப் பால்கே விருது பிரபல திரைப்பட நடிகர் மிதுன் சக்ரவர்த்திக்கு வழங்கப்பட உள்ளது.

சிறந்த நடிகருக்கான விருது கன்னட நடிகர் ரிஷப் ஷெட்டிக்கு வழங்கப்படவுள்ளது.

சிறந்த நடிக்கைக்கான விருது, திருச்சிற்றம்பலம் என்ற தமிழ் திரைப்படத்தில் நடித்த நித்யா மேனனுக்கு வழங்கப்படவுள்ளது.

சிறந்த திரைப்படத்திற்கான விருது மலையாள திரைப்படமான ஆட்டம் படத்திற்கு வழங்கப்படவுள்ளது.

அரிஜித் சிங்கிற்கு சிறந்த பின்னணி பாடகருக்கான விருதும், பாம்பே ஜெயஸ்ரீ-க்கு சிறந்த பின்னணி பாடகிக்கான விருதும் வழங்கப்படவுள்ளது.

<<<<<>>>>>

இந்தியா வந்துள்ள மாலத்தீவு அதிபர் திரு முகமது மொய்சூ, குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்முவை, புதுதில்லியில் நேற்று சந்தித்து பேசினார்.

இருநாடுகளுக்கும் இடையிலான நல்லுறவு குறித்தும், அதை மேலும் வலுப்படுத்துவது குறித்தும் இரு தலைவர்களும் ஆலோசனை நடத்தினர்.

அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் இந்தியா செயல்படுவதாகவும், அந்த வகையில் மாலத்தீவுடன் நெருங்கிய நட்புறவை இந்தியா விரும்புவதாகவும் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்தார்.

குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கரையும், மாலத்தீவு அதிபர் சந்தித்து பேச்சு நடத்தினார்.

இருநாடுகளுக்கும் பரஸ்பரம் பயன் அளிக்கும் திட்டங்கள் குறித்தும், எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் இரு தலைவர்களும் ஆலோசனை மேற்கொண்டனர்.

<<<<<>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடியை, ஆந்திர முதலமைச்சர் திரு சந்திரபாபு நாயுடு புதுதில்லியில் நேற்று சந்தித்து பேசினார்.

போலாவரம் திட்டத்தில் திருத்தப்பட்ட மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்ததற்காக பிரதமருக்கு திரு சந்திரபாபு நாயுடு நன்றி தெரிவித்தார்.

இதேபோல், சத்தீஸ்கர் முதலமைச்சர் திரு விஷ்ணு தியோ சாய், புதுதில்லியில் நேற்று பிரதமரை சந்தித்தார்.

மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் வளர்ச்சித் திட்டங்கள் குறித்தும், நக்சல் தீவிரவாத தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும் அவர் எடுத்துரைத்தார்.

பிரதமரின் வீட்டுவசதித் திட்டத்தின்கீழ், சத்தீஸ்கரில் அதிக வீடுகளை கட்ட ஒப்புதல் அளித்திருப்பதற்காக பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு, சத்தீஸ்கர் முதலமைச்சர் நன்றி தெரிவித்தார்.

<<<<<>>>>>

காசநோயை முற்றிலும் ஒழிக்க மத்திய அரசு உறுதிபூண்டு செயல்பட்டு வருவதாக சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா கூறியுள்ளார்.

காசநோயாளிகளுக்கான ஊட்டச்சத்து ஆதரவு திட்டத்தின் முக்கிய முன்முயற்சிகளை புதுதில்லியில் நேற்று அவர் தொடங்கிவைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், காச நோயாளிகளுக்கு ஊட்டச்சத்து ஆதரவு வழங்க அரசு கூடுதலாக ஆயிரத்து 40 கோடி ரூபாயை ஒதுக்கியிருப்பதாக கூறினார்.

இத்திட்டத்தின்கீழ் இதுவரை ஒரு கோடியே 13 லட்சம் பேர் பயன்பெற்றிருப்பதாகவும், அவர்களுக்கு 3 ஆயிரத்து 202 கோடி ரூபாய் நேரடி பணப்பரிமாற்றத் திட்டத்தின்கீழ் உதவி வழங்கப்பட்டுள்ளதாகவும் திரு ஜெ பி நட்டா தெரிவித்தார்.

<<<<<>>>>>

நாட்டில் கடந்த 10 ஆண்டுகளில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி 175 சதவீதம் அதிகரித்துள்ளதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

ஜெர்மனியில்நடைபெற்ற நீடித்த வளர்ச்சி தொடர்பான மாநாட்டில் நேற்று அவர் உரையாற்றினார்.

2014-ஆம் ஆண்டில் இந்தியாவில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி 75 ஜிகாவாட்டாக இருந்தது என்றும், தற்போது அது 208 ஜிகாவாட்டாக அதிகரித்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் வகையில் இந்தியா பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அவர் கூறினார்.

கடந்த பத்தாண்டுகளில் இந்தியாவில் சூரியசக்தி மின் உற்பத்தித்திறன் 33 மடங்கு அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உறபத்தி 2014-ஆம் ஆண்டில் 193 பில்லியன் யூனிட்டாக இருந்தது என்றும், தற்போது அது 360 பில்லியன் யூனிட்டாக அதிகரித்துள்ளது என்றும் திரு பிரல்ஹாத் ஜோஷி கூறினார்.

<<<<<>>>>>

நாட்டில் திறன் கட்டமைப்பை மேம்படுத்த மத்திய அரசு முன்னுரிமை அளித்து செயல்படுவதாக வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

இந்திய தொழில் கூட்டமைப்பும், தேசிய திறன் மேம்பாட்டு கழகமும், மும்பை மாநகராட்சியும் இணைந்து மும்பையில் அமைத்துள்ள திறன் மேம்பாட்டு மையத்தை நேற்று அவர் திறந்துவைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், உற்பத்தித்திறனை அதிகரிக்க திறன் வாய்ந்த மனிதவளம் அவசியம் என்று கூறினார்.

பாடத்திட்ட கல்விக்கும், தொழில்துறை தேவைகளுக்கும் இடையே உள்ள இடைவெளியை களையும் நோக்கில், அரசு தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக திரு பியூஷ் கோயல் தெரிவித்தார்.

<<<<<>>>>>

நாட்டின் பருத்தி ஏற்றுமதியை அடுத்த ஆறு ஆண்டுகளுக்குள் 100 பில்லியன் டாலர் அளவுக்கு அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மத்திய ஜவுளித் துறை அமைச்சர் திரு கிரிராஜ் சிங் கூறியுள்ளார்.

உலக பருத்தி தினத்தையொட்டி, புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நேற்று அவர் கலந்துகொண்டு பேசினார்.

2030-ஆம் ஆண்டுக்குள் நாட்டின் பருத்தி தொழில்துறையை 350 பில்லியன் டாலர் என்ற அளவுக்கு அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, ஜவுளி அமைச்சகம் செயல்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

இந்த இலக்கை எட்ட சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரும், ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

பருத்தி விவசாயிகள் நலனுக்காக அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாகவும் திரு கிரிராஜ் சிங் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய ஜவுளித்துறை செயலாளர் திரு ரச்சனா ஷா, நாட்டில் 60 லட்சம் பருத்தி விவசாயகள் உள்ளதாக கூறினார்.

பருத்தி தொழில்துறையின் மூலம் நான்கரை கோடி பேர் நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகளை பெற்றுள்ளதாக அவர் தெரிவித்தார்.

<<<<<>>>>>

நாட்டின் பல்வேறு பகுதிகளில் அடுத்த சில நாட்களுக்கு கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

அஸ்ஸாம், அருணாச்சலப்பிரதேசம், மேகாலயா, நாகாலாந்து, மணிப்பூர் ஆகிய மாநிலங்களின் சில இடங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

லட்சத்தீவின் சில இடங்களிலும், கேரளா மற்றும் தெற்கு கர்நாடகத்தின் சில இடங்களிலும் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கேரளாவின் சில மாவட்டங்களுக்கு கனமழைக்கான ஆரஞ்சு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

தமிழகத்தின் நாமக்கல் மாவட்டத்தில் புதிதாக 31 இடங்களில் தானியங்கி மழை மானி நிலையங்களை வானிலை ஆய்வு மையம் அமைத்துள்ளது.

இதன்மூலம், மழை தொடர்பான துல்லியமான தகவல்கள் கிடைக்கும் என எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - கண்ணன் - 45 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>

ஹமாஸ் மற்றும் ஹிஸ்புல்லா அமைப்புகளை ஒடுக்கும் நடவடிக்கைகளில் இஸ்ரேலுக்கு, அமெரிக்கா தொடர்ந்து ஆதரவு அளிக்கும் என்று அமெரிக்க அதிபர் திரு ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தப்பட்ட முதலாம் ஆண்டு தினத்தையொட்டி, இஸ்ரேல் அதிபர் திரு ஐசக் ஹெர்சாக்-குடன் தொலைபேசியில், திரு பைடன் பேசினார்.

பிணைக் கைதிகள் அனைவரும் மீட்கப்பட வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

தேசிய மகளிர் ஜூனியர் ஹாக்கி போட்டியில், மத்தியப் பிரதேசம், ஜார்க்கண்ட், ஹரியானா, ஒடிசா அணிகள் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளன.

ராஞ்சியில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் நேற்று நடைபெற்ற காலிறுதி ஆட்டங்களில் மத்தியப்பிரதேசம் - உத்தரப்பிரதேசத்தையும், ஜார்கண்ட் - மகாராஷ்ட்ராவையும் வென்றன.

இதேபோல் ஹரியானா – பஞ்சாபையும், ஒடிஷா – சத்தீஸ்கரையும் வென்று அரையிறுதிக்கு முன்னேறின.

-------------

ஆர்ட்டிக் ஓபன் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்குகிறது.

பின்லாந்தின் வான்டாவில் 13-ஆம் தேதிவரை இப்போட்டி நடைபெறுகிறது.

இதில், இந்தியா சார்பில் லக்ஷயா சென், பி வி சிந்து, கிடாம்பி ஸ்ரீகாந்த் உள்ளிட்ட 12 வீரர், வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

<<<<<>>>>>